**<u>அசல் வழக்கு எண். 14/2020</u>**

13.08.2024

**பெயர் – ஜெயக்குமாரி க/பெ.சின்னச்சாமி (Pw1)**

**<u>சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

(1) நான் என்ன பரிகாரம் கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எனக்கு திருமணத்திற்கு முன்பு என் தந்தை ஊர் என்ன என்றால் குமாரமங்கலம் ஆகும். எனக்கு எந்த வருடம் திருமணம் ஆனது என்றால் 1995 ம் வருடம் திருமணம் ஆனது. தாவாச் சொத்து மற்றும் என் கணவருக்கு பாத்தியப்பட்ட இதர சொத்துக்கள் 1995 ம் வருடத்திற்கு முன்பு ஏற்படுத்தப்பட்ட ஆவணங்கள் பற்றி விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். துங்காவி கிராமம், க.ச.497/7 ல் உள்ள பு.ஏ.6.09 பூமியானது ஆதியில் மாரப்ப கவுண்டர் மற்றும் அவரது சகோதரர் சுப்பே கவுண்ருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். மாரப்ப கவுண்டருக்கு அவரது மகன் வேலுச்சாமி கவுண்டரும், சுப்பே கவுண்டரும் தாவாச் சொத்தைப் பொறுத்து ஒரு தரப்பினராக இருந்து ஏதாவது ஆவணங்கள் ஏற்படுத்திக் கொண்டார்களா என்றால் இல்லை. பழனிச்சாமி கவுண்டரும், வேலுச்சாமிக் கவுண்டரும் தான் பாகம் செய்து கொண்டார்கள்.

(2) மாரப்ப கவுண்டர் மகன் வேலுச்சாமி கவுண்டருக்கு குப்பாத்தாள் என்பவர் மூத்த மனைவி செல்லம்மாள் என்பவர் இளைய மனைவி என்றால் சரிதான். மாரப்ப கவுண்டர் மனைவி பெயர் மாராத்தாள் என்றால் சரிதான். சுப்பாத்தாளுக்கு சரோஜினி (எ) வள்ளியம்மாள், சிவகாமி, செல்வாம்பாள், கோபாலன் ஆகியோர்கள் வாரிசுகள் என்றால் சரிதான். செல்லம்மாளுக்கு ரேவதி எனது கணவர் சின்னப்பன் (எ) சின்னச்சாமி ஆகியோர்கள் வாரிசுகள் என்றால் சரிதான். சுப்பாத்தாளின் மகள் சரோஜினி (எ) வள்ளியம்மாளின் மகள் தான் 1ம் பிரதிவாதி ஜெயந்தி என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி ஜெயந்திக்கு என் கணவர் தாய் மாமன் என்றால் சரிதான். சுப்பே கவுண்டருக்கு ஒரே மகன் பழனிச்சாமி கவுண்டர் என்றால் சரிதான். பழனிச்சாமி கவுண்டரின் வாரிசுகளில் ஒருவர் பாலசுப்பிரமணியம் தான் 1ம் பிரதிவாதியின் கணவர் என்றால் சரிதான். பு.ஏ.6.09 பூமியானது மாரப்ப கவுண்டரின் மனைவி மாராத்தாள், வேலுச்சாமிக் கவுண்டரின் வாரிசுகள், சுப்பே கவுண்டரின் மகன் பழனிச்சாமி கவுண்டர் ஆகியேர்கள் 29.06.1977 ம் தேதி பாகம் செய்து

கொண்டார்கள் என்றால் சரிதான். **மேற்படி 29.06.1977 தேதியிட்ட பாக சாசன ஆவணம் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

(3) பி.வா.சா.ஆ.1 பாக ஆவணத்தில் சுப்பே கவுண்டர் மகன் பழனிச்சாமி கவுண்டருக்கு பு.ஏ.6.09 பூமியில் பொதுவில் சரிபாதி பு.ஏ.3.04 ½ பூமி ஏ ஷெட்யூல் சொத்தாக ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி பத்திரத்தின்படி வேலுச்சாமி கவுண்டர் அண்ணன் என்பதால் தென் பகுதி பாகச் சொத்தும், பழனிச்சாமி கவுண்டர் தம்பி என்பதால் வட பகுதி பாகச் சொத்தும் ஒதுக்கப்பட்டது. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் நான் குறிப்பிட்டபடி வாசகங்கள் இல்லை என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் மேற்படி பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் தென்புற பகுதி, வடபுற பகுதி என்ற வாசகங்கள் காணப்படவில்லை என்றாலும், அதன் படி சொத்து திசை கண்டு பிரிக்கப்படவில்லை என்று சொன்னாலும் சரியல்ல. பு.ஏ.6.09 பூமியில் மற்றொரு பொதுவில் சரிபாதி பு.ஏ.3.04 ½ பூமி மாரப்ப கவுண்டர் மனைவி மாராத்தாள், அவரது மகன் வேலுச்சாமி கவுண்டரின் வாரிசுகளுக்கு பி ஷெட்யூல் சொத்தாக ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். சுப்பே கவுண்டரின் மகன் பழனிச்சாமி கவுண்டருக்கு ஒதுக்கப்பட்ட பூமியிலும், மாரப்ப கவுண்டர் மகன் வேலுச்சாமி கவுண்டரின் வாரிசுகளுக்கு ஒதுக்கப்பட்ட பூமியிலும் செக்கு பந்தி கண்டு பூமி எழுதப்படவில்லை என்றால் சரியல்ல. எழுதப்பட்டுள்ளது. மேற்படி இரு பூமிகளுக்கும் தட வழி தனிப்பட்ட முறையில் ஒதுக்கப்பட்டது குறித்து எந்த ஒரு வாசகங்களும் இல்லை என்றால் சரிதான்.

(4) மேற்படி இரு பூமிகளும் பொதுவில் சரிபாதி என்று கண்டு தான் பத்திரம் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் அவ்வாறு எதுவும் இல்லை. மேற்படி பூமியில் உள்ள கிணற்றையும் பொதுவில் சரிபாதி என்று கண்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி பாக ஆவணம் எழுதிய 3 மாதங்களுக்கு பின்னிட்டு வேலுச்சாமி கவுண்டரின் மூத்த மனைவி குப்பாத்தாள், அவரது வாரிசுகளான மைனர் செல்வாம்பாள், மைனர் கோபாலன் இரண்டாவது மனைவி செல்லம்மாள் அவரது வாரிசுகளான மைனர் ரேவதி, எனது கணவர் சின்னப்பன் (அப்போது மைனர்) ஆகியோர்கள் 29.06.1977 ம் தேதியில் ஏற்கனவே தங்களுக்கு பாகப்படி ஒதுக்கப்பட்ட சொத்தின் பொதுவில் சரிபாதி பு.ஏ.3.04 ½ பூமி மற்றும் இதர பூமிகளை ஒரு துரைசாமி கவுண்டருக்கு 12.10.1977 ம் தேதி

குத்தகைக்கு கொடுத்ததாக நான் ஆவணம் வா.சா.ஆ.3 தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.3 குத்தகை பத்திரத்தில் பு.ஏ.3.04 ½ பூமியை தென்புறம் சரிபாதி கிழமேல் நீளியாக என்று தவறான சொத்து விவரம் காட்டப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 குத்தகை பத்திரத்தில் சொல்லியவாறு திசை கண்டு பிரிக்கப்பட்டுள்ள விவரத்தை அசல் பாக ஆவணத்தில் (பி.வா.சா.ஆ.1) குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல.

(5) வேலுச்சாமி கவுண்டரின் வாரிசுகளால் திட்டமிட்டு பொய்யான சொத்து விவரத்தை வா.சா.ஆ.3 ஆவணத்தில் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 ஆவணத்தில் கண்டுள்ளபடி பூமி திசை கண்டு பிரிபடவில்லை என்றால் சரியல்ல. குத்தகை ஆவணத்தில் சுப்பே கவுண்டரின் மகன் பழனிச்சாமி கவுண்டர் சாட்சி கையெழுத்திடவில்லை என்றால் சரியல்ல. சாட்சி கையெழுத்து செய்துள்ளார். மேற்படி பழனிச்சாமி கவுண்டர் சாட்சி கையெழுத்து செய்த விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் நேரடியாக நான் பார்க்கவில்லை ஆனால் ஆவணத்தில் சாட்சி கையெழுத்தை பார்த்துள்ளேன். இந்த வழக்கில் பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிர்வாதத்தை படித்துப் பார்த்தேனா என்றால படித்துப் பார்த்தேன். அந்த எதிர்வாதத்தில் பழனிச்சாமிக் கவுண்டரின் சாட்சி கையொப்பத்தை மறுத்து பிரதிவாதிகள் எதிர்வாதம் செய்துள்ளார்கள் என்றால் ஞாபகம் இல்லை. பிரதிவாதிகள் பழனிச்சாமி கவுண்டரின் சாட்சி கையொப்பத்தை மறுத்துள்ள நிலையில் மேற்படி சாட்சி கையெழுத்து பழனிச்சாமி கவுண்டருடையது என்பதை நிரூபணம் செய்ய கையெழுத்து நிபுணருக்கு அனுப்பி ஆய்வு செய்ய நடவடிக்கை எதுவும் எடுத்தேனா என்றால் இல்லை.

(6) பழனிச்சாமி கவுண்டருக்கு தெரிந்து தான் மேற்படி ஆவணமும், அதில் உள்ள வாசகங்களும் ஏற்படுத்தப்பட்டது என்பதை நிரூபணம் செய்வதற்கு வேறு ஏதும் ஆவணம் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அவர் சாட்சி கையெழுத்து செய்த ஆவணம் தான் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வா.சா.ஆ.3 குத்தகை ஆவணம் அமுலுக்கு வரவில்லை அந்த பத்திரத்தில் கண்டுள்ளபடி துரைசாமி கவுண்டருக்கு சுவாதீனம் கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல கொடுக்கப்பட்டுள்ளது. வா.சா.ஆ.3 ஆவணம் குத்தகை பத்திரம் ஏற்படுத்தப்பட்டதற்கு பிறகு ஒரு மாதம் கழித்து 15.11.1977 ம் தேதி மாரப்ப கவுண்டர் மனைவி மாராத்தாள் மற்றும் வேலுச்சாமிக் கவுண்டரின்

வாரிசுகளால் பொதுவில் சரிபாதி பு.ஏ.3.04 ½ மற்றும் இதர பூமிகளை பாகம் செய்து கொண்டார்கள் என்றால் சரிதான். **மேற்படி 15.11.1977 தேதியிட்ட பாக ஆவணம் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

(7) மேற்படி வேலுச்சாமி கவுண்டரின் வாரிசுகளுக்கு ஒதக்கப்பட்ட பு.ஏ.3.04 ½ பூமியில் பொதுவில் சரிபாதி பு.ஏ.1.52 ¼ பூமி வேலுச்சாமி கவுண்டரின் முதல் மனைவி குப்பாத்தாளுக்கு வாழ் நாள் ஆண்டு அனுபவிக்கும் பாத்தியம் கொடுத்து அதன் பின்னிட்டு அவருடைய குழந்தைகளான மைனர் செல்வாம்பாள் மற்றும் மைனர் கோபாலன் மேஜரான பின்னிட்டு அவர்களுக்கு சேரத்தக்கது என்று C ஷெட்யூல் 2 வது அயிட்டமாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி பாக ஆவணத்தில் மற்றொரு பொதுவில் சரிபாதி பு.ஏ.1.52 ¼ பூமி வேலுச்சாமிக் கவுண்டரின் இளைய மனைவி செல்லம்மாளுக்கு வாழ் நாள் ஆண்டு அனுபவிக்கும் பாத்தியம் கொடுத்து அதன் பின்னிட்டு அவருடைய குழந்தைகளான மைனர் ரேவதி மற்றும் எனது கணவர் சின்னப்பன் (அப்போது மைனர்) மேஜரான பின்னிட்டு அவர்களுக்கு சேரத்தக்கது என்று D ஷெட்யூல் 2 வது அயிட்டமாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

(8) மேற்படி பாக பத்திரத்தின் சொத்து விவரத்தில் மேற்படி இரு பூமிகள் செக்கு பந்தி இல்லாமலும், திசை கண்டும் பிரிபட்டு எழுதப்படவில்லை என்றால் ஞாபகம் இல்லை. மேற்படி இரு பூமிகளிலும் பொதுவில் சரிபாதி என்று தான் கண்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி பாகப் பத்திரத்தில் வா.சா.ஆ.3 ஆவணமான குத்தகை பற்றி எந்த வாசகமும் காணப்படவில்லை என்றால் சரியல்ல குறிப்பிடப்பட்டுள்ளது. குத்தகை ஆவணம் ரத்து செய்யாமல் மேற்படி பாக ஆவணம் ஏற்படுத்தப்பட்டது என்றால் ஞாபகம் இல்லை. மேற்படி பி.வா.சா.ஆ.2 பாகப் பத்திரத்திபடி அவரவர்கள் சுவாதீனம் எடுத்துக் கொண்டார்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ.3 குத்தகை ஆவணத்தை ரத்து செய்யாமல் பி.வா.சா.ஆ.2 ஆவணத்தை ஏற்படுத்தியுள்ளது சட்ட நிலையின் படி நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.2 ஆவணத்தின் படி ஒதுக்கப்பட்ட இரண்டு பாக பூமிகளுக்கும் தனிப்பட்ட தடவழி சம்மந்தமாக எந்த வாசகமும் இல்லை என்றால் சரிதான். சீலநாயக்கன்பட்டியைச் சேர்ந்த சுப்பே கவுண்டர் மகன் பழனிச்சாமி கவுண்டர் என்பவர் பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில் ஒரு சாட்சியாக கையொப்பம் செய்துள்ளார் என்றால் அவ்வாறு தான் ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.3 குத்தகை ஆவணத்தில் சுப்பே

கவுண்டர் மகன் பழனிச்சாமி கவுண்டர் சாட்சி கையொப்பம் செய்யததாகவும் மேற்படியாருக்கு பூமி ஏற்கனவே திசை கண்டு பிரிப்பட்டிருக்கிறது என்பது பழனிச்சாமி கவுண்டருக்கு தெரியும் என்று நான் கூறியுள்ள நிலையில் பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில் பூமி திசை கண்டு பிரிபடாமல் பொதுவில் சரிபாதி என்று எழுதப்பட்டுள்ளது முன்னுக்கு பின் முரணாக உள்ளது என்றால் சரியல்ல. அவர் தெரிந்து தான் இரண்டு ஆவணத்திலும் கையெழுத்து செய்துள்ளார்.

(9) பி.வா.சா.ஆ.1 பாக ஆவணப்படி சுப்பே கவுண்டர் மகன் பழனிச்சாமி கவுண்டருக்கு பொதுவில் சரிபாதி பு.ஏ.3.04 ½ பூமியும் மற்றும் இதர பூமிகளை பழனிச்சாமி கவுண்டரும் அவரது வாரிசுகளான சின்னதுரை (எ) குருசாமி சிவலிங்கம் (எ) சடையப்பன் மற்றும் 1ம் பிரதிவாதியின் கணவர் பாலசுப்பிரமணியம் ஆகியோர் 16.04.1984 ல் பாகம் செய்து கொண்டார்கள் என்றால் ஞாபகம் இல்லை ஆனால் பாகம் செய்து கொண்டார்கள் என்ற விவரம் தெரியும். **மேற்படி 16.04.1984 தேதியிட்ட பாக ஆவணம் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி பாக ஆவணத்தில் பொதுவில் சரிபாதி பு.ஏ.3.04 ½ பூமி பழனிச்சாமி கவுண்டருக்கு ஏ ஷெட்யூலாக ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி பாக ஆவணத்தில் செக்கு பந்தி கண்டோ, பூமி திசை கண்டோ, தட வழி கண்டோ எழுதப்பட்டவில்லை என்றால் அவர்கள் என்ன செய்தார்கள் என்று தெரியவில்லை. வா.சா.ஆ.3 குத்தகை ஆவணத்தில் பழனிச்சாமிக் கவுண்டர் சாட்சியாக கையொப்பம் செய்திருந்தால் பூமி ஏற்கனவே திசை கண்டு பிரிக்கப்பட்டுள்ளது தெரிந்திருக்கும் அவ்வாறு பூமி திசை கண்டு பிரிக்கப்பட்டாததாலும் அதில் அவர் சாட்சியாக கையெழுத்து செய்யாததாலும் தான் பி.வா.சா.ஆ.3 ஆவணத்தில் தன் பங்கிற்கு ஒதுக்கிய சொத்தைப் பொறுத்து செக்கு பந்தி மற்றும் திசை கண்டு எழுதப்படாமல் பொதுவில் சரிபாதி என்று குறிப்பிட்டுள்ளார் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 குத்தகை ஆவணத்தில் அவர் கையெழுத்து செய்துள்ளார்.

(10) 07.10.1987 ம் தேதி வேலுச்சாமிக் கவுண்டரின் வாரிசுகளால் வா.சா.ஆ.3 குத்தகை ஆவணத்தை ரத்து செய்து ஒரு ஆவணம் வா.சா.ஆ.4 ஆவணம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ஆவணத்தில் கண்டுள்ள தவறான சொத்து விவரம் தான் வா.சா.ஆ.4 ஆவணத்திலும் கண்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4 குத்தகை ரத்து ஆவணத்தில் பி.வா.சா.ஆ.2 பாக ஆவணத்தைப் பற்றி எந்த

வாசங்களும் குறிப்பிடப்படவில்லை என்றால் ஞாபகம் இல்லை. வா.சா.ஆ.4 குத்தகை ரத்து ஆவணத்தில் எனது கணவரும் ஒரு தரப்பினர் என்றால் சரிதான். வா.சா.ஆ.4 குத்தகை ரத்து ஆவணம் பக்கம் 3 ல் இந்த சொத்துக்களைப் பொறுத்து இரு தரப்பிலும் பூமியின் சுவாதீனம் தங்கள் வசம் உள்ளதாக இருவரும் குறிப்பிட்டு தனித்தனி வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் உள்ளதாக கண்டு எழுதப்பட்டுள்ளது என்றால் அது பற்றி ஞாபகம் இல்லை. வா.சா.ஆ.4 குத்தகை ரத்து ஆவணத்தில் மத்தியஸ்தர்களின் சமரசத்தின்படி இரு தரப்பிலும் தாக்கல் செய்த வழக்கை திரும்ப பெற்றுக்கொள்ள குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஞாபகம் இல்லை. மேற்கண்ட சங்கதிகளின்படி வா.சா.ஆ.3 குத்தகை ஆவணத்தின் படி சுவாதீனம் துரைசாமி கவுண்டர் வசம் ஒப்படைக்கப்படவில்லை என்றால் சரியல்ல. சுவாதீனம் துரைசாமி கவுண்டர் வசம் ஒப்படைக்கப்பட்டது. சுவாதீனம் துரைசாமி கவுண்டர் வசம் ஒப்படைக்கப்பட்டது என்பதை காட்ட எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்யவில்லை. வா.சா.ஆ.3 குத்தகை ஆவணம் மற்றும் வா.சா.ஆ.4 குத்தகை ரத்து ஆவணமும் பெயரளவிற்கு ஏற்படுத்தப்பட்ட நிபமான ஆவணமும் அதில் கண்டுள்ள படி பூமி திசை கண்டு பிரிபடவில்லை என்றால் சரியல்ல.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க தொடர் குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2024.08.13 15:26:08 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்